# நாம் கடனாளிகளை மன்னிப்பது போல...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கற்பித்து தந்த ஜெபத்திலே, "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்ற வரிகளை நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம். அதை பலமுறை அறிக்கை செய்திருக்கின்றோம். இந்த இடத்திலே கர்த்தர்தாமே குறிப்பாக பொருளாதார கடன்களை குறித்து பேசாமல், பொதுவாக நாம் எப்படியாக இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதையும், மற்றவர்களுடைய தப்பிதங்கள், குற்றங்கள் குறைகளை நாம் மன்னிக்க வேண்டியத்தின் அவசியத்தையும், பிறர் உங்களுக்கு என்ன செய்ய விரும்புகின்றார்களோ அதையே நீங்கள் அவர்களுக்கு செய்யுங்கள் என்பதையும் குறித்து நமக்கு கற்றுக் கொடுக்கின்றார். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, காலை வந்தனங்களையும், வாழ்த்துதல்களையும் ஒருவர் மற்றவருக்கு தெரிவிப்பதைப் போல, சிலர், கர்த்தர் கற்பித்த ஜெபத்தை அன்றாடம் கூறிவிட்டு தங்கள் பாட் டிற்கு சென்று விடுகின்றார்கள். இன்னும் சிலர், இரக்கத்தின் மேன்மையும், மன்னிப்பின் மாட்சிமையையும் உணராமல், இந்த ஜெபத்தை, ஒருவ்வொரு நாளும், பல தடவைகள் கிளிப்பிள்ளையைப் போல சொல்லிக் கொள்கின்றார்கள். எங்களுடைய பாவங்களை மன்னிக்கப்படும்படியாக கடமை உணர்வுடன் மற்றவர்களுடைய குற்றங்களை மன்னித்து விடவேண்டும் என்பது பொருளல்ல. நாம் கர்த்தருடைய சாயலிலே வளரும்படிக்கு, முகங்கோணாமல் இரக்கத்தை காண்பிப்பதில் நாள்தோறும் வளரவேண்டும். ஒரு சமயம், கர்த்தருடைய பிரதான சிஷனாகிய பேதுரு, தன் சகோதரனை எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மன்னித்தால் போதுமா என்று கேட்டான். அதற்கு கர்த்தர்: ஏழுமுறையல்ல, ஏழெழுவது முறை மன்னிக்க வேண்டும் என்று மன்னிப்பதற்கு கணக்கு வைக்க வேண்டாம் என்று பொருளுடன் பதிலளித்தார். இவைகள்பேசுவதற்கும்,போதிப்பதற்கும் அருமையாக இருக்கின்றது. ஆனால், ஒரு மனிதனால் இவைகளை எப்படி தன் வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்த முடியும்? மிகவும் கடினமானது. மனிதனால் கூடாத காரியத்தை செய்து முடிக்கும்படி, தேவன்தாமே, தூய ஆவியானவரின் துணையை நமக்கு தந்து நம்மை பெலப்படுத்தி, வழி நடத்த உண்மையுள்ளவராக இருக்கின்றார். எனவே உங்களை தேவனிடத்தில் ஒப்புக் கொடுங்கள். அவர்தாமே நம்மை நாளுக்குநாள் புதிதாகி அவர் சாயலிலே பெருகச் செய்வார்.

**எபேசியர் 4:32**

**கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள பரலோக தந்தையே, மற்றவர்களுடைய கடன்களை மன்னிப்பது இன்னதென்று உணர்ந்து, மனதார அதை செய்யும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பகைமையை வைத்திராதிருங்கள்

“கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகின்றவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன், அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்” (சங்கீதம் 139:21-22) என்று தாவீது ராஜா தன்னிடத்திலிருக்கும் தேவனைக் குறித்த வைராக்கியத்தை வெளிப்படுத்துகின்றார். அன்றிருந்த தேவ ஜனங்களில் சிலரும், இன்றிருக்கும் விசுவாச மார்க்கத்தாரில் சிலரும் இதை பரிசுத்த சினம் என்று வகையறுத்து இந்த வசனங்களை தவறான முறையிலே விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியாக பூர்வத்தாருக்கு போதித்துமிருக்கின்றார்கள். எவரைக் குறித்ததான, பகை, வன்மம், கசப்பு போன்றவற்றை தேவனுடைய ஜனங்கள் மனதிலே வைத்திருக்கும்படி தேவன் ஒருபோதும் எவருக்கும் கூறவில்லை. துன்மார்க்கன் தன் துன்மார்கத்திலே அழிந்து போவது தேவனுக்கு பிரியமான காரியமல்ல. நாம் அக்காலத்திலே இயேசுகிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவவனற்றவர்களுமாயிருந்தோம். நம்மக்கும் பரலோகத்திற்கும் இடையிலே பகையாக பிரிவினையின் நடுச்சுவர் இருந்தது. (எபேசியர் 2:12-13). தேவன் எங்களை வெறுத்துத் தள்ளவில்லை. அவர் எங்களை பகைஞராக கருதாமல், தம்முடைய பிள்ளைகளாகும்படி சித்தம் கொண்டார். ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே பிதாவாகிய தேவனுடைய விரும்பமாக இருக்கின்றது. மனிதகுலம் பாவத்திலே அழிந்து போகாதபடிக்கு அவர் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். இந்த உலகம் ஆண்டவராகிய இயேசுவை பகைத்தது. இன்றும் உலகத்தின் போக்கை நாடி, அதன் வழியிலே செல்பவர்கள் ஆண்டவராகிய இயேசுவையும், அவரைப் பின்பற்றுகின்றவர்களையும் பகைக்கின்றது. அன்று அவர் சிலுவையில் தொங்கும் போது, தன்னைத் துன்பப்படுத்துகின்றவர்களை மன்னிக்கும்படியாக பிதாவை வேண்டிக் கொண்டார். அவரைப் போலவே நாமும், இந்த உலகத்தின் போக்கிற்கு உடன்படாதவர்களாவும், அதன் போக்கிலே வாழும் மனிதர்களைக் குறித்த பகைமையை உள்ளத்திலே வைத்து வளர்க்காதபடிக்கும், அவர்களுடைய இரட்சிப்புக்காக பரிந்தி பேசி ஜெபிக்கின்றவர்ளாக காணப்பட வேண்டும்.

**மத்தேயு 5:44**

**உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்;**

**ஜெபம்:** ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உம்முடைய ஒரே குமாரனை அனுப்பிய தேவனே, மனிதகுலம் யாவும் உம்மை அறியவேண்டும் என்ற மனநிலையுடையவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வேறுபிரிந்த ஜீவியம்

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாகவும், கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்பரவானவர்களும் இடறலற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்று தேவ ஊழியராகிய பவுல் தாமே ஆலோசனை கூறியிருக்கின்றார். நாம் இந்த உலகத்திலே வாழ்தாலும், இந்த உலகத்தின் போக்கிற்கு உடன்பட்டவர்கள் அல்ல. அதே வேளையிலே இந்த உலகத்தின் போக்கில் நடந்து, அந்நிய மார்க்கங்களை பின்பற்றுகின்றவர்களை பகைத்து வெறுத்து தள்ளிவிடக் கூடாது. அறியாமையிலும், குருட்டாட்டத்திலும், பரலோகத்திற்கு பகைஞர்களாகவும் வாழும் அவர்களுக்கு, நம்மிடத்திலே வெளிப்பட்ட மகா பெரிதான தேவ கிருபையானது, வெளிப்பட வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருக்க வேண்டும். அப்படியானால், அவர்களுடைய வழிகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமோ? அவர்கள் மத்தியிலே அவர்களோடு அவர்களாக, அவர்கள் செய்யும் கிரியைகளை பராமுகமாக இருக்க வேண்டுமோ? இல்லை. துன்மார்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரயாசக்காரர் உட்காரும் இடத்திலெ உட்காராமலும் இருக்கும்படி பரிசுத்த வேதாகமமம் ஆலோசனை கூறுகின்றது. (சங் 1:1). நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது?அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங் கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது (2 கொரி 6:14-16). உலகம் முழுவதையும் இரட்சித்தும் உங்கள் ஆத்துமா கெட்டுப்போனால் அதனால் உங்களுக்கு என்ன பலன்? எனவே பகைவரை நேசிப்பது என்பது, அவர்கள் போக்கிலே செல்வதோ அல்லது அவர்கள் வழிகளை ஏற்றுக் கொண்டு, அவர்களை மனம்நொந்து போகாதபடிக்கு, அவர்கள் அழைக்கும் இடங்களுக்கெல்லாம் செல்வதென்பதோ பொருளல்ல. நம்மீது அன்புகூர்ந்து நமக்காக பலியான கர்த்தர் தாமே, நம்முடைய பாவங்களை நிவர்த்தியாக்கும் கிருபாதார பலியானார். ஆனால், அன்றும், இன்றும், என்றென்றும், அவர் யாதொரு பாவத்திற்கும் பங்கேற்பவரல்லவே. எனவே, நீங்களும் உலகத்தாரின் வழியிலேநடவாமலும், அவர்களை பகைக்காமலும், தேவனுடைய சாட்சி யான வாழ்ந்து முன்னேறுங்கள்.

**ரோமர் 12:2**

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**ஜெபம்:** இந்த உலகத்தினாலே கறைபடாமல் வாழும்படி என்னை வேறு பிரித்த பரலோக பிதாவே, எனக்கு வெளிப்பட்ட உம்முடைய மகா மேன்மையான கிருபையானது உம்மை அறியாதவர்கள் வாழ்விலும் வெளிப்படுவதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சமாதானத்தை காத்துக் கொள்ளுங்கள்

ஆண்டவராகிய இயேசுதாமே இழந்து போன சமாதானத்தை கொடுக்கும்படிக்கு இந்த பூவுலகிற்கு வந்தார். ஆனால், சத்துருவாகிய பிசாசானவனோ, ஆதியிலிருந்து இழந்துபோன சமாதானத்தை பெற்றுக் கொள்ளாதபடிக்கும், பெற்றுக் கொண்ட சமாதானத்தை கெடுக்கும்படி சுற்றித் திரிகின்றான். ஒரு விசுவாசியானவன், தான் செய்த குற்றத்தினாலேயோ அல்லது தான் செய்யாத குற்றத்தினாலேயோ, பகை, வன்மம், கசப்பை தன் இருதயத்திலே தங்கும்படி இடம் கொடுக்கும் போது, மனநிம்மதியை இழந்து போகின்றான். நாம் பெற்றுக் கொண்ட சமாதானத்தை காத்துக் கொள்ளும்படிக்கு, இடறலை உண்டு பண்ணுகின்றவனை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சில வேளைகளிலே, விசுவாசிகள் தங்கள் உள்ளத்திலிருக்கும் கசப்பும் பகையும் நியாமானது என்று எண்ணிக் கொள்கின்றார்கள். அது எப்படிப்பட்ட நியாயமாக இருந்தாலும், அந்த விசுவாசிகளின் உள்ளத்திலே கலகமும், குழப்பமும் உருவாகும். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, கிறிஸ்தவ வாழ்க்கையிலே எதிர்ப்பு, ஏளனம், சாபமான வார்த்தைகள், சண்டையை கிளப்பிவிடும் பகைகள் தவிர்க்க முடியாதவைகள். அவைகள் மத்தியிலே விசுவாசியானவன், தான் பெற்றுக் கொண்டு மனச் சமாதானத்தை இழந்து போகாமல் காத்துக் கொள்ள வேண்டும். எப்படி? "நான் உங்களுக்குச் சொல்கிறேன், உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்: உங்களை சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள்: உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்: உங்களை நிந்திக்கின்றவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்." என்று சமாதான பிரபுவாகிய ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். எனவே, "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக் காத்துக் கொள்ளும்." (பிலி 4:6-7). சிறிதான ஆரம்பியுங்கள், தேவ ஆவியானவர்தாமே இவற்றுள் உங்களை பெருகச் செய்வார்.

**யோவான் 14:27**

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்;**

**ஜெபம்:** மனச்சமாதானம் அருளும் தேவனே, இந்த உலகிலே என்னை எதிர்க்கும் சக்திகள் பல இருப்பதினாலே, நான் அவை யாவற்றையும் மேற்கொண்டு, நீர் விரும்பும் வெற்றி வாழ்க்கை வாழ எனக்கு துணை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனஅழுத்தமும் மனக்கசப்பும்

ஆரம்பம் அற்பமானதாக தோன்றலாம். உங்கள் பிரயாசம் அர்த்தமற்றது போல காணப்படலாம். ஆனால் ஒரு விசுவாசியானவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அவர் சொன்ன காரியங்களை செய்யும்படி தன்னை ஒப்புக் கொடுக்கும் போது அவன் விசுவாச வாழ்க்கையை வாழ் பவனாக காணப்படுவான். "உங் களை நிந்திக்கின்றவர்களுக்காக வும் உங்களை துன்பப்படுத்துகிற வர்களுக்காகவும் ஜெபம் பண்ணு ங்கள்" என்ற வார்த்தையின்படி, ஒரு விசுவாசியானவன், நிந்தனை கள், துன்பங்கள் மத்தியிலே நான் ஜெபம் செய்யப் போகின்றேன் என்றுதீர்மானம்செய்வது மிகப் பெரி தான முதலாவது படியாக இருக்கின்றது. அவன் அப்படி தீர்மானம் செய்யும் போது, பலவிதமான மாம்சத்தின் உணர்வளைகள் சிந்தை யிலே தோன்றலாம். ஆனால், அவனுக்குள்ளே வாசம் செய்யும் ஆவி யானவர், அவற்றை மேற்கொள்ள அவனுக்கு உதவி செய்வார். அடுத் தபடியாக, அந்த விசுவாசியானவன், தான் தீர்மானித்தபடி ஜெபம் பண்ண ஆரம்பிக்க வேண்டும். பல மணித்தியாலகளாக ஜெபம் செய்ய வேண்டும் என்பது பொருளல்ல. அவன் அடைந்த நிந்தனைகளயும், துன்பங்களையும் குறித்த மனஅழுத்தமும், கசப்பும் மனதிலே உண்டா கும் போது, சத்துருவானவனின் நோக்கம் அவனில் நிறைவேறாத படிக்கு, அவனை நிந்தித்தவர்களையும், துன்பபப்படுத்தினவர்களையும் மனதிலே சபித்துக் கொள்ளாமலும், சாபமான வார்த்தைகளை அறிக் கையிடாமலும், அவர்களை ஆசீர்வதித்து ஜெபிக்க ஆரம்பிக்க வேண் டும். ஒருவேளை, ஆரம்பித்தில் அத்தகைய செயலானது, அர்த்தமற்ற தாக தோன்றலாம். அப்படியாக அவன் அவர்களுக்காக ஜெபம் செய் யும் போது, அவன் தேவனுடைய சித்தத்தை தன் வாழ் விலே நிறை வேற்றுகின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஒருவன் தேவனு டைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அதன்படிக்கு கிரியைகளை நடப்பி க்கும் போது, அவன் தேவனுக்கு பிரியமுள்ளவனாக நடந்து கொள்வ தினாலே, அவன் வாழ்விலே வெற்றியும் ஆசீர்வாதமும் உண்டாகும். தம்மை விசுவசிக்கின்ற ஒவ்வொருவரையும் பரலோகம் சேர்ப்பதும் அவ ர்களுக்கு நித்திய ஜீவனை அருளுவதுமே தேவனாகிய கர்த்தருடைய அநாதி தீர்மாக இருக்கின்றது. வாக்கில் உண்மையு ள்ளவர் அப்படியே நிறைவேற்றி முடிப்பார்.

**ரோமர் 12:14**

**உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்.**

**ஜெபம்**:மனிதனால் செய்து முடிக்க கூடாத நன்மைகளை செய்ய பெலன் தந்து நடத்தும் தேவனே, என்னை காரணமில்லாமல் என்னை நிந்தித்து துன்பப் படுத்துகின்றவர்களுக்காக ஜெபம் செய்ய கற்றுத் தருவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | மே 6 📖 மாலை வாசகம் – கலா 6:9

# நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருங்கள்

**ரோமர் 2:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

"உங்கள் சத்துரு பசியாய் இருந்தால் அவனுக்கு போஜனம் கொடு" என்று கூறும் போது, ஒரு மனிதன் உங்களை முழுப்பகையாய் பகைத்து, உங்களுக்கு அநியாயம் செய்யும்படி காத்திருக்கும் போது, நீங்கள் அவனிடம் சென்று, அவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது பொருளல்ல. வாதுக்கும், சண்டைக்கும், வன்முறைக்கும் தர்ணம் பார்த்துக் கொண்டிருப்பவர்களைவிட்டுநாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உங்கள் சத்துரு பசியாய் இருந்தால் அவனுக்கு போஜனம் கொடு என்பதைக் குறித்த சில காரியங்களை இந்நாளிலே தியானிப்போம். முதலாவதாக, நன்மை செய்யும் படி விசுவாசியொருவனுக்கு ஏற்படும் சந்தர்ப்பங்கள். ஒரு விசுவாசியானவன், ஒவ்வொரு நாளும் தான் படுக்கையால் எழுந்த பின்பு, சத்துருக்களை தேடி, எந்த எதிரிகளுக்கு இன்றைக்கு உதவி செய்வேன் என்று ஊரெல்லாம் சுற்றித் திரிய வேண்டும் என்பது பொருளல்ல. அதே நேரத்தில், எதிர்கின்ற வர்களுக்கு உதவி செய்ய ஏற்படக்கூடிய தகுந்த சந்தர்ப்பங்களை அவன் சாதுரியமாக தவிர்த்துக் கொள்ள முயற்சி செய்யக்கூடாது. கிடைக்கும் ஒவ்வொரு தகுந்த சந்தர்ப்பங்களிலும் யாவருக்கும் நன்மை செய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, தேவ பிள்ளைகளுடைய கனிகள் மாறிப்போவதில்லை. சுவையான கனிதரும் மாமரமானது, அதனிடம் கனிகளை பறித்து உண்ணும்படி வரும் யாருக்கு அதை தடை செய்யும்? அந்த மரமானது இயற்கையாகவே, தன்னிடம் வரும் சன்மார்க்கன், துன்மார்க்கன், ஏழை, பணக்காரன், வழிப்போக்கன், வீட்டு சொந்தக்காரன் யாவருக்கும் தன்னிடமிருக்கும் சுவையான கனியையே கொடுக்கும். அதுபோலவே, தேவ பிள்ளையின் சுபாபமானது காணப்பட வேண்டும். தனக்கு பிரியமானவனுக்கு மட்டும் உதவி செய்வேன். என்னை மதித்து கனம்பண்ணுகின்றவனுக்கு மட்டும் ஆவியின் கனிகளை காண்பிப்பேன். மற்றவர்களுக்கு என் மாம்சத்தின் இச்சைகளை காண்பிப்பேன் என்று ஒரு விசுவாசியானவன் கூறிக் கொள்ள கூடுமோ? ஒரு விசுவாசியானவனின்வாழ்விலே ஆவியின் கனி வெளிப்படாமல் அதை மறைத்து வைத்தால், அது அவனுடை மாம்சத்தின் எண்ணமாக இருக்கும் அல்லவோ. எனவே, எல்லா வேளைகளிலும் நன்மை செய்யவதையே நோக்கமாக கொண்டு, கிடைக்கும் சந்தர்பங்களை ஆதயப்படுத்திக் கொள்ளுங்கள்..

**ஜெபம்:** எல்லா சூழ்நிலைகளிலும் உமது சாயலிலே வளரும்படி போதித்து நடத்துகின்ற தேவனே, எனக்கு கிடைக்கும் எல்லா சந்தர்பங்களில் நான் நன்மை செய்யும்படி ஆயத்தமாக இருக்க நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அறியாமையிலே வாழ்பவர்கள்

வேறு பிரிந்த வாழ்க்கை என்பது, பாவிகள் துரோகிகள் என்று மற்ற வர்களை ஒடுக்கி, தள்ளி, புறம்போக்காக வாழும் வாழ்க்கையல்ல என் பதை இந்த நாட்களிலே தியானித்து வருகின்றோம். மாறாக அவர்கள் வாழும் சமுதாயத்தின் மத்தியிலே நாம் வாழ்ந்தாலும் அல்லது அவர்கள் நாம் வாழும் சமுதாயத்தில் இருந்தாலும், நாம் நம்மை கறை ப்படுத்திக் கொள்ளாமல், தேவ கிருபையை அவர்களுக்கு வெளிப்படு த்ததுகின்றவர்களாக, தேவனுக்கு பிரியமுள்ளவாழ்க்கை வாழ வேண் டும். பழைய ஏற்பாட்டு காலங்க ளிலே வாழ்ந்த மதத்தலைவர்கள், வேறுபிரிக்கபட்ட ஜனங்கள் என்பத ன் கருபொருளை அறியாமல், தன க்கடுதவனை நேசிக்க வேண்டும் என்றும், தங்களைப் போலில்லாதவர்களைவெறுத்துதள்ளிவிட வேண் டும் என்ற போதனை கொண்டவர்ளாக காணப்பட்டார்கள். ஆத லால் ஆண்டவராகிய இயேசுதாமே "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்." (மத்தேயு 5:43) என்று மலைப்பிரசங்கித்திலே கூறி னார். அது தேவனுடைய கட்டளையல்ல, மாறாக, மதத்தலைவர்கள் அப்படியாக போதனை செய்து வந்தார்கள். தேவ ஊழியராகிய மோசே வழியாக நியாயப்பிரமாண விதிகளை கொடுக்கும் போது, தேவனாகிய கர்த்தர்தாமே அவர்களை நோக்கி: "உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார் அவர் பட்சபாதம்பண்ணுகிற வரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல. அவர் திக்கற்ற பிள் ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன் புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார். நீங்களும் எகிப்துதேசத்தில் அந்நியராயிருந்தபடியால், அந்நியரைச் சிநேகிப்பீர்களாக." என்று அந்நியர்களை எப்படியாக நடத்த வேண்டும் என்று குறிப்பாக கூறியிருக்கின்றார். (உபாகமம் 10:17-19). மேலும், "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. அந்நியரை உபசரிக்க மற வாதிருங்கள் அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித் ததுண்டு." (எபிரெயர் 13:1-2) என்று எபிரெயருக்கு எழுத்தின நிருபத் திலே வாசிக்கின்றோம். எனவே, நம்முடையவர்களை மாத்திரம் சிநேகி ப்போம் என்ற எண்ணத்தை முற்றாக தள்ளிவிட்டு, தெய்வீக சுபாவ ங்களை மற்றவர்களுக்கும் காண்பியுங்கள்.

**உபாகமம் 10:17**

அவர் பட்சபாதம்பண்ணுகிற வரும்அல்ல, பரிதானம் வாங் குகிறவரும் அல்ல.

**ஜெபம்**: பட்டசபாதம் இல்லாமல் கிருபையை பொழிகின்ற பரலோக தேவனே, எல்லையற்ற தெய்வீக அன்பை நான் மற்றவர்களுக்கும் காண் பிக்கும்படி, உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்து வழிநடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | மே 8

📖 மாலை வாசகம் – 1 யோவான் 4:20

# மாறாத நற்கனிகள்

சிலர் தனக்கடுத்தவனை சிநேகித்து, புறம்பாயிருக்கும் மற்றவர்களை எண்ணாமல் போகின்றார்கள். இன்னும் சிலரோ, புறம்பாயிருக்கின்றவர்களுக்கு உதாரத்துவமுள்ளவர்களாயிருந்து, தனக்கடுத்தவனை மறந்து போய் விடுகின்றார்கள். அன்னதானங்களும் தானதர்மங்களும் வீட்டிலே ஆரம்பிக்கபட வேண்டும் என்று பொருள்படும் ஆங்கில பழமொழியை அறிந்திருக்கின்றோம். அதாவது, இன்று சில விசுவாசிகள், பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் முகமறியாத அந்நியர்களான ஏழை எளியவர்களை விசாரிக்கும்படி, பல ஆயிரக்கணக்காண பணத்தை செலவழித்து, கடல் கடந்து செல்ல ஆயத்தமுள்ளவர்களா யிருகின்றார்கள். ஆனால், அவர்கள் கண்முன், வீட்டிலே உள்ள கூடப் பிறந்த சகோதரர்களுக்கும் அல்லது சபையிலே இருக்கும் கிறிஸ்துவுக்குள் உடன் சகோதரர்களுக்கும் உதவி செய்ய மனதற்றவர்களாக இருக்கின்றார்கள். "நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." (கலாத்தியர் 5:9-10) என்பதை மறந்து விடக்கூடாது. நாம் நம் சொந்தக் குடும்பத்தை விசாரிக்கின்றவர்களாக இருக்கவேண்டும். "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." (1 தீமோ 5:8). எனவே, தேவனுடைய வார்த்தைகளின் கருப்பொருளை அறிந்து செயற்படுங்கள். கடந்த நாட்களிலே நாம் தியானித்த பிரகாரம், உண்பதற்கு உகந்த சுவையான கனிகளை கொடுக்கும் ஒரு மரமானது, தனது கனிகளை, சகோதரர், அந்நியன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று மாற்றிக் கொள்வதில்லை. அதே பிரகாரமாகவே, நம்முடைய தேவனும் இருக்கின்றவராகவே இருக்கின்றார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கின்றார். அவரைப் போலவே, நாமும், தெய்வீக சுபாவத்திலே மாறாதவர்களாக இருக்க வேண்டும். இவருக்கு அப்படியாக செய்வேன், அவருக்கு இப்படியாக கொடுப்பேன் என்று நேரத்திற்கு நேரம் நம் நற்சுபாவங்களை மாற்றிக் கொள்ளாமல், எப்போதும் தேவனுக்கு எற்ற நற்கனிகளை கொடுக்கின்றவர்களாக நாம் காணப்பட வேண்டும்.

**எபிரெயர் 13:8**

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

**ஜெபம்**: நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனே, நான் வீட்டிலும் வெளியிலும் உமக்கேற்ற நற்கிரியைகளை பட்சபாதமின்றி செய்யும்படிக்கு உமக்கேற்ற இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | மே 9

📖 மாலை வாசகம் – சகரியா 7:10

# யாரைக் கனம் பண்ணுகின்றீர்கள்

"என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக. ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும் தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?" (யாக்கோபு 2:1-4) என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். நம்முடைய தேவன், ஏழையோ, பணக்காரனோ, சமுதாயத்தில் உயர்ந்தவனோ தாழ்ந்தனோ என்ற பட்சபாதம் இல்லாமல் தாழ்மையுள்ள இருதயமுள்ளவர்களுக்கு கிரு பை அளிக்கின்றவராக இருக்கின்றார். எனவே, ஐசுவரியமுள்ளவர்கள் என்று தேவன் ஜனங்களை புறக்கணிக்கின்றவர் என்று எண்ணிவிடக்கூடாது. மாறாக, நாம் வசதியடன் வாழும் விசுவாசியையும், வறுமைக்கோட்டில் வாழும் விசுவாசியையும் காணும் போது, எப்படியாக அவர்களோடு நடந்து கொள்கின்றோம் என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். அவர் ஒவ்வொருவருடைய இருதயத்திலுள்ளவைகளை அறிந்திருக்கின்றார். எனவே, ஒரு விசவாசியானவன், தனக்கடுதவனை எப்படியாக சிநேகிக்கின்றான் அல்லது கனப்படுத்துகின்றான் என்பதை தானே ஆராய்ந்து அறிந்து கொள்வது அவனுக்கு நல்லது. ஒருவேளை, நாம் முன்பு வாழ்ந்த வழிமுறைமையின்படி, யாவரோடும் எப்படி ஐக்கியமாக இருப்பது எப்படி என்பது ஒரு சவலாக இருக்கலாம். எல்லா சவால்களையும் மேற்கோண்டு, தேவனுக்கு பிரியமில்லாத பழைய பெருமையின் சுபாவங்கள் யாவையும் மாற்றும்படிக்கு தேவ ஆவியானவர் நமக்கு உதவி செய்கின் றவராக இருக்கின்றார். முதலாவதாக, அவர்களோடு எனக்கு சரிவராது, இவர்களோடு எனக்கு ஒத்துப்போகாது என்று விசுவாசிகளை தன் இஷ்டப்படி வகைப்படுத்தாமல், ஒவ்வொருவருமே தங்கள் தங்கள் சுபாவங்கள் மாற வேண்டும் என்ற தீர்மானத்தை எடக்க வேண்டும். அப்போது, தேவ ஆவியானவர் அவனை வழிநடத்திச் செல்வார்.

**யாக்கோபு 4:6**

ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர் த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

**ஜெபம்**: உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று தள்ளிவிடாமல், தாழ்மையுள்ளவர்கள் மேல் கிருபையை பொழிகின்ற தேவனே, நானும் உம்மைப் போல மாறும்படிடக்கு, உணர்வுள்ள வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாம் அந்நியர்களாக இருந்தோம்

ஆதியிலே மனித குலத்தின் முதல் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் பாவம் செய்து, தேவ மகிமையை இழந்து நித்திய ஆக்கினைக்கு ள்ளானர்கள். அந்த சாபமானது அவர்கள் வழி தோன்றிய மனிதகுலத் தின்மேல் விழுந்தது. அந்த சாபத்திலிருந்து விடுதலையுண்டாக்கும்ப டிக்கு ஒரு மீட்பரை அனுப்புவேன் என்று தேவானாகிய கர்த்தர்தாமே வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தமானது, ஒரு குறிப்பிட்ட ஜனத்திற் குரியதல்ல, மாறாக, ஆதிப் பெற் றோரின் வழியான வந்த சந்த தியினர் யாவருக்கும் உடைய தாகும். அந்த நாளிலிருந்து, ஜன ங்கள் பகுதிபதியாக, பிரி ந்து போய், தமக்கென்று மதங்களை யும், வழிபாடுகளையும், மார்க் கங்களையும் தெரிந்து கொண் டார்கள். அப்படியாகவே நம்மு டைய முன்னோர்களும், அத்தகைய வழிபாடுகளிலே அகப்பட்டு, மெய் யான தேவனை அறியாதவர்களாக வாழ்ந்து வந்தார்கள். தேவனாகிய கர்த்தர் ஆதியிலே கூறிய மீட்பின் வாக்குத்தத்தை நிறைவேற்றும்ப டிக்கு, ஒரு ஜனக்கூட்டத்தை பிரித்தெடுத்து, அவர்கள் வழியாக அந்த வாக்குத்தத்தை நிறைவேற்றினார். தமது வாக்குத்தத்தை நிறைவேற்று ம்படி அவர் வேறு பிரித்த ஜனக்கூட்டமானது, தகுதியின் அடைப்படை யில் தெரிந்தெடுக்கப்படவில்லை. மாறாக, தேவ கிருபையின் படியே அவர்களை தெரிந்தெடுத்தார். அந்த ஜனக்கூட்டத்தின் வழியாக மெசி யாவாகிய இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார். அக்காலத்திலே, தேவனு க்கு பகைஞராகவும், பரலோக ராஜ்ய்தியற்கு அந்நியராகவும் இருந்த நம்மேல் அவருடைய திவ்விய மீட்பு வெளிப்பட்டது. அந்த மீட்பானது நம்முடைய தகுதியின் அடிப்படையிலே அல்ல, மாறாக, தேவ கிருபை யினால் உண்டானது. மீட்பைப் பெற்ற தம்முடையவர்களாகிய நம்மை, பரலோகம் சேர்க்கும்படி மறுபடியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருவார். ஆனாலும் அவர் ஏன் தாமதிக்கின்றார்? சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். எனவே, நான் கர்த்தர் அறிந்தவன், நான் வேறு பிரிக்கப்பட்டவன் என்று அகந்தை கொள்ளா மலும், இதுவரைக்கும் கர்த்தரை அறியாதவர்களை, பாவிகள் என்று வெறுத்துத்த தள்ளாமலும், அவர்களுக்கும் தேவ கிருபை வெளிப்படு ம்படி நீடியபொறுமையோடும், அவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள்..

**2 பேதுரு 3:9**

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண் டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிரு க்கிறார்.

**ஜெபம்:** அநாதி ஸ்நேகத்தால் என்னை நேசித்த தேவனே, உம்முடைய கிருபைக்காக ஸ்தோத்திரம். நூன் பெற்றுக் கொண்ட மீட்ப்பை மற்றவர்களும் பெற்றுக் கொள்ளும்படி நீர் உம்முடைய கிருபையை பொழிந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – 1 யோவான் 3:1

# பரம பிதாவின் பிரியமான பிள்ளைகள்

"கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையு முள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமா யிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." (சங்கீதம் *103:8-13*). ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் நிற்பதும், நிர்மூலமாகாதிருப்பதும் கர்த்தருடைய கிருபையாக இருக்கின்றது. எனவே, மேன்மை பாராட்டுதல் ஒரு போதும் நம்மை குறித்தாக இருக்கக்கூடாது. நம்முடைய மேன்மைபாராட்டுதல் தேவ கிருபையை குறித்தாக இருக்கட்டும். இத்தகைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்ற தகுதியற்றவர்களாகிய நாம், எதிரிகள் என்று எவரையும் கருதாமலும், பகை, வன்மம், கசப்பு போன்றவை மனதிலே குடி கொள்ளாமலும் இருக்கும்படிகயாக இருதயத்தை காத்துக் கொள்ள வேண்டும். நாம் எதிரிகள் என்று கருதும் மனிதர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்கள் குற்றங்களை மனதார மன்னிக்க பழகிக் கொள்ள வேண்டும். புறம்பே இருக்கின்றவர்களைப் போல நாமும் முற்காலத்திலே இருந்தோம் என்பதை மறந்துபோய்விடக்கூடாது. "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள் அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச்செய்கிறார்களல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." (மத்தேயு *5:45-48*)

**மத்தேயு 5:48**

**ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.**

**ஜெபம்:** பூரண சந்குணராயிருகின்ற பிதாவாகிய தேவனே, நானும் உம்மைப்போல இருக்கும்படிக்கு, நாளுக்கு நாள் என்னுடைய உள்ளான மனிதன் புதிபிக்ககப்படும்படிக்கு என்னை கரம் பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | மே 12 | 📖 மாலை வாசகம் - லூக்கா 21:1-4

# தானதர்மங்களின் நோக்கங்கள்

இந்த உலகிலே, பரவலாக அநேகர் தானதர்மங்களை செய்து வருகின்றார்கள். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரித்து வருகின்றார்கள். உலகின் பொருளாதார அளவுகோலின்படி, சில இடங்களிலே, கர்த்தரை அறிந்தவர்கள் கர்த்தரை அறியாதவர்களைவிட அதிகமாக செய்கின்றார்கள். வேறு சில இடங்களிலே கர்த்தரை அறிந்தவர்களைவிட அறியாதவர்கள் அதிகமாக செய்கின்றார்கள். ஆனால், தானதர்மங்களை செய்வதன் நோக்கம் என்னவென்பதை அவரவர் தங்கள் இருதயத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். சிலர் மன இரக்கமுள்ளவர்களாக எப்போதும் ஏழை எளியவர்களுக்கு உதவி வருகின்றார்கள். இன்னும் சிலர் தங்கள் பெயரும் நன்கொடையாளர் பட்டியலில் வரவேண்டும் என்ற ஆசையுடையவர்களாக செய்து வருகின்றார்கள். சில நாடுகளிலே, மிகையான உள்ளாட்டு வரியிலிருந்து தப்பித்துக் கொள் ளும்படிக்கும், தாங்கள் செய்துவரும் வியாபாரம் பிரபல்யமாக வேண்டும் என்றும், இன்னும் சிலர் பற்பல காரணங்களுக்காக அன்னதானங்களை வழங்குகின்றார்கள். ஒருவன் தன் மனதிலே என்ன நோக்கத்தை வைத்து, தானதர்மங்களை செய்து வருகின்றானோ, அவன் அதை அடைந்து கொள்வான். சிலர் அழிந்து போகும் இந்த உலகத்தின் மேன் மைக்காகவும், சிலர் அழியாத பரலோக மேன்மைகாகவும் கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். உலகத்தின் எதையும் அடைந்து கொள்ளவேண்டும் என்றால், உலகத்தின் அதிபதியின் விருப்பப்படி காரியங்கள் நடப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிபதியானவன், அவைகளை அங்கீகரிக்க வேண்டும். அது போலவே, பரலோகத்தின் மேன்மைக்காக பிரயாசப்படுகின்றவனின், பிரயாசங்கள் பரலோத்தின் பிதாவாகிய தேவனாகிய கர்த்தர் முன்னிலையில் அவை ஏற்புடையவைகளாக காணப்பட வேண் டும். பிரியமான சகோதர சகோதரிகளே,"திக்கற்ற பிள்ளைகளும் வித வைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது." எனவே, தானதர்மங்களை நாம் செய்ய வேண்டும். அந்த தானதர்மங்களை செய்ய முன்னதாக உங்கள் இருதயத்தின் எண்ணங்கள் தேவனுக்கு முன்பாக ஏற்புடையதாக இருக்கட்டும்.

**மத்தேயு 6:1**

மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

**ஜெபம்**: மன இரக்கமும் உருக்கமுமுள்ள தேவனே, இந்த உலகத்திற்கு பிரியமாக நான் நடக்க வேண்டும் என்பதற்காக தானதர்மங்களை செய்யாமல், உமக்கு பிரியமாக இருக்கும்படி கிரியைகளை நடப்பிக்க உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அதிகமாய் கொடுத்தவன் யார்?

ஒரு கிராமதின் மறுமலர்ச்சித் திட்டத்திறன்படி, சிறிய வைத்தியசாலையொன்றை சிறுவும்படிக்கு, அந்த கிராமத்திலே இயங்கி வந்த சன சமூக நிலையத்தினால், நிதி திரட்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டது. அந்த கிராமதில் குடியிருந்த யாவரும் அந்த திட்டத்தை முன்னெடுத்து செல்லும்படிக்கு, உதவ முன்வந்தார்கள். அவர்களில் அதிகமாக கொடுக்கும் முதல்பத்துபேரின் பெயர்கள், முறைப்படி, அந்த வைத்திய சாலையின் வெளி நோயாளர் மண்டபத்தின் சுவரிலே, எழுதப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது ஒரு நல்ல திட்டம், இதன் வழியாக பெயரும் புகழும் உண்டாக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்ட ஒரு சில முதலாளிகள், வரவிருக்கும் வைத்திய சாலையினால் தங்களுக்கு இலாபம் ஒன்றுமில்லை என்று மனக் குழப்பத்தோடு, மக்கள் என்ன சொல்வார்கள் என்பதினாலே, தங்கள் மதாந்த வருவாயின் ஒரு சதவீதத்தை, நன்கொடையாக கொடுத்தார்கள். வேறு சில வியாபாரிகள், மனமுகந்து தங்கள் மாதாந்த வருவாயில் ஒருசிறிய தொகையை கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த நன்கொடைகள் யாவும், இந்த உலகத்தின் பொருளாதார அளவுகோலின்படி மிகப் பெரிதான தொகையாக இருந்தது. அந்தக் கிரமாத்தில், கூலி வேலை செய்து, நாளாந்தம் கடுமையான கஷ்டப்பட்டு உழைக்கும் மனிதனொருவன், தனக்கு கிடைக்கு கொஞ்ச வருவாயில் பாதியை அதாவது 50 வீதத்தை வைத்திய சாலையின் திட்டத்திற்காக வழங்கி னான். வைத்தியசாலை திட்டம் முடிவடைந்தது. ஆனால், அந்த எளிமையான வாழ்க்கை வாழும், தாராளமான மனம் படைத்த அந்த மனிதனுடைய பெயர், அதிகமாக கொடுத்தோரின் பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை. அவனோ, அதைக் குறித்து எந்த கவலையும் இல்லை. ஆனால், தன்னுடைய கிராமத்திற்கு ஒரு வைத்திய சாலை வந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டான். அருமைய தேவ பிள்ளைகளே, இவர்களிலே யார் அதிகமாக கொடுத்தான் என்று அந்த சனசமூக நிலைய அதிகாரிகரிடத்தில் கேட்டால், அவர்களுடைய பதில் எப்படியாக இருக்கும்? அதே கேள்வியை தேவனாகிய கர்த்தரிடம் கேட்டால் அவருடைய பதில் எப்படியாக இருக்கும்? மனிதனோ வெளியான காரியங்களை பார்க்கின்றான். ஆனாலே, தேவனோ, மனிதனுடைய இருதயங்களில் என்ன இருக்கின்றது என்பதை ஆராய்ந்தறிகின்றார்.

**2 கொரிந்தியர் 9:7**

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து என் சிந்தைகளை அறிகின்ற தேவனே, என்னுடைய இருதயமானது உமக்கு முன்பாக உண்மையுள்ளதாக இருக்கும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | வைகாசி 14

📖 மாலை வாசகம் – லூக்கா 12:15

# தர்மசகாயத்தில் வளருங்கள்

“அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரி யத்திலும் பெருகவேண்டும். இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக்கொண்டு, உங்கள் அன்பின் உண் மையைச் சோதிக்கும்பொருட்டே சொல்லுகிறேன். நம்முடைய கர்த்தரா கிய இயேசுகிறிஸ்துவின் கிருபை யை அறிந்திருக்கிறீர்களே அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங் கள் அவருடைய தரித்திரத்தினா லே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே. இதைக்குறித்து என் யோசனையை உங்களுக்கு அறிவிக்கிறேன் இதைச் செய்கிறதற்கு மாத்திரமல்ல, செய்யவேண்டுமென்று உற்சாகப்படுகிறதற்கும் ஒருவருமாய் ஆரம்பம்ப ண்ணின உங்களுக்கு இது தகுதியாயிருக்கும். ஆகையால் அதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள் கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக. ஒருவனுக்கு மனவிருப்பமிரு ந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும். மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்த மும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகி றேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமி ல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களு டைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.” *(2 கொரி 8:7-15)* என்று அப்போஸ்தலராகிய பவுல், தானதர்மங்களை குறித்த விஷயத்திலே, ஒரு விசுவாசியாவனின் மனமும், வாழ்க்கையும், தேவ வசனத்தின்படி எப்படியாக இருக்க வேண்டும் என்று மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார். இன்று சில விசுவாசிகள், இவைகளை மறந்து, தங்கள் பொருளாதார பெருக்கத்தையும், தங்களுக்குண்டான யிருக்கும் தேவ ஆசீர்வாதத்தையும் மேன்மைபாராட்டி வருகின்றார்கள். “அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக் குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்க க்கடவது.”

**பிலிப்பியர் 2:4**

**அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.**

**ஜெபம்:** விருப்பத்தையும் செய்கையையும் என்னில் உருவாக்கும் தேவனே, நான் என் அழைப்பின் மேன்மையை மறந்து இந்த உலகத்தின் காரியங்களிலே சிக்கிக் கொள்ளாதபடிக்கு என்னை கரம்பிடித்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீங்கள் தர்மம் செய்யும் போது...

அக்காலத்திலே, சிலர் தங்களை பக்தியுள்ளவர்கள் என்றும், தேவ பிரமாணங்களின்படி தாங்கள் தானதர்மங்களை செய்கின்ற நீதிமான்கள் என்று காண்பித்து, மனுஷரால் புகழப்படுவதற்கு, தாரை, அதாவது எக்காளத்தை (Trumpet), ஆலயங்களிலும் வீதிகளிலும் ஊதும்படி மனுஷர்களை ஏற்படுத்தினார்கள். அவர்கள் எக்காளத்தை ஊதும் போது, அந்த இடத்திலே தானதர்மங்கள் இன்னாரால் செய்யப்படுகின்றது என்று ஊரார் யாவரும் அறிந்து கொள்வார்கள். "வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" என்று இவர்களை குறித்து மனிதர்கள் புகழ்ந்து பேசுவார்கள் ஆனால் தேவனானவரோ இவர்களைப் பார்த்து அப்படி கூறுவதில்லை. இப்படிப் பட்டவர்களுடைய நிலைமையைக் குறித்து ஆண்டவராகிய இயேசு தாமே கூறும் போது: "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். முதலாவதாக, இவர்கள் தங்களை நீதிமான்கள் என்று எண்ணிக் கொள்ளலாம், ஆனால் உண்மையிலே இவர்கள் மாயக்காரர் என்று பெயர் பெற்றார்கள். இரண்டாவதாக, இப்படியாக செய்யப்பட்ட தானதர்மங்களின் பலனை அவர்கள் அடைந்து விட்டார்கள். இப்படிப்பட்டவர்கள், மனுஷரால் புகழப்படுவதற்காகவே தானதர்மங்களை செய்கின்றார்கள். அவர்கள் மனதின் ஆசையின்படி அவர்கள் அதை அடைந்து கொண்டார்கள். இவர்கள் தங்கள் உதாரத்துவத்தை ஊருக்கு தெரியப் படுத்தும் வேளையிலே, தங்கள் பெயருக்கும் புகழுக்குமாக, தானதர்மங்களை பெறும்படி வரும் வறியோரை ஊருக்கு வெளிப்படுத்தி, ஒரு வகையிலே, வெட்கமடையச் செய்து விடுகின்றார்கள். எனவே, ஊரார் உலகத்தாரால் உண்டாகும் புகழை விரும்பாமல், தேவனால் ஏற்றுக் கொள்ளும்படிக்கு நற்கிரியைகளை செய்வோமாக.

**மத்தேயு 6:2**

ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல,உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே;

**ஜெபம்:** அன்பின் பரலோக பிதாவே, நான் மாயக்காரரைப் போல உமக்கு முன்பாக நடந்து கொள்ளாதபடிக்கு, மனத்தாழ்மையும், கீழ்படிவுமள்ள இருதயத்தை தந்து உம்முடைய திவ்விய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வெள்ளி \| மே 16 | 📖 மாலை வாசகம் - லூக்கா 17:7-10 |
|---|---|

# வெளியரங்கமான பலன்

"நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது." என்று எப்படியாக ஒரு விசுவாசியின் தானதர்மங்கள் இருக்க வேண்டும் என்பதை ஆண்டவராகிய இயேசு கூறுயிருக்கின்றார். அப்படியானால், நாம் செய்யும் நற்கிரியைகள் ஒவ்வொன்றும் மிக இரகசியமாக செய்யப்பட வேண்டுமா? நாம் செய்தவைகள் வேறு வழியால் வெளிப்பட்டால், அதன் பலன் அடைந்தாயிற்றோ? என்ற கேள்விகள் மனதிலே எழலாம். காரியத்தின் கருப்பொருளானது இன்னதென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, தான தர்மமானது நம்முடைய பெயரும் புகழுக்காவும் செய்யப்படாமல், ஏழை எளியவர்கள் பலனடைய வேண்டும். அவர்கள் வாழ்வு மேம்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக செய்யப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசுவின் நாட்களிலே, ஒரு சமயம், கொன்னைவாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொ ண்டார்கள். அப்பொழுது, அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா என்றார் அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப்பேசினான். அதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார் ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர் களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம்பண்ணினான். (மாற்கு *7:32-36*) அதுபோலவே, ஒரு விசுவாசியானவன் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் போது, அதை யாருக்கும் கூற வேண்டாம் என்று திட்டமாக கூறிக் கொண்டான். ஆனால், அந்த உதவியை செய்ய ஏழையொருவன், தனக்கு கிடைத்த நன்மையினால் மிகவும் மகிழ்ச்சியடைந்து, ஊர் முழுவதுமாக சென்று தனக்கு கிடைத்த நன்மையை அறிவித்தான். அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. அவ்வண்ணமாக மனிதர்கள் உங்களை புகழும் போது, தேவன் முன்னிலையிலே உங்களை தாழ்த்தி, நாங்கள் அப்பிரயோஜனமான மனிதர்கள், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று அறிக்கையிடுங்கள்.

**மத்தேயு 6:4**

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

**ஜெபம்**: எல்லாவற்றையும் அறிந்து தேவனே, எந்த விதமான பெருமையின் வித்தும் எனக்குள்ளே வளர நான் இடங் கொடுங்காமல், உம் சமுகத்திலே என்னை தாழ்த்தி, உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கருத்துள்ள ஜெபம்

ஊரிலே வாழும் மக்களின் வாழ்விலே துன்பங்கள், துக்கங்கள் ஏற்படும் போது, அந்த ஊரிலே வாழ்ந்த மனிதனொருவன், அவர்களோடு சேர்ந்து தானும் துக்கப்படுகின்றேன் என்பதை காட்டும்படிக்கு, அவர்களுக்கு ஆறுதலின் வார்த்தைகளை சொல்லி வந்தான். அவன் பேச்சு வல்லமையுடையவனாக இருந்ததா லும், அவனுடைய குரல்வளம் நன்றாக இருந்தாலும், அடுக்கடுக்காக வார்த்தைகளை இணைத்து, கவிதை நடையிலே வசனங்களை தொகுத்து கூறிக் கொள்வான். தானும் அவர்களில் ஒருவனைப் போல தன்னை காண்பித்து வந்த போதும், அவர் மனதார அந்தக் காரியங்களை செய்வதில்லையென்றும், அருமையான வார்த்தைகளை வெளிவேடமாக கூறிக் கொள்கின்றான் என்று அவன் வீட்டார் நன்றாக அறிந்திருந்தார்கள். ஆனாலும், மக்கள் மனதை கவர்ந்து, அவர்களின் பராட்டுக்களை பெற்றுக் கொள்வது, அவனுக்கு பிரியமாக இருந்தது. மக்கள் அவனை பாராட்டும் போது, அவன் இன்னும் அநேக பாராட்டுகளை பெற்றுக் கொள்ளும்படி இன்னும் அதிகமாக தான் செய்வதை செய்து வந்தான். அந்த மனிதன் மட்டுமல்ல, மற்றவர்கள் தங்களை பாராட்டும்போது, அதைக் குறித்து மனக்குளரிச்சியடையாதவன் யார்? இவ்வண்ணமாக ஒருநாள் ஒருவன் தன்னை அறியாமலே சுபாவமாகவே ஒரு நற்கிரியையை செய்து விட்டார். அதை கண்ட அயலவர்கள், அவன் அதை சிறப்பாக செய்தான் என்று அவனை பாராட்டினார்கள். நாட்கள் சென்ற பின்பு, பாராட்டுதலை பெற்றுவிட்டேன், இனி எப்படியாவது சில நற்கிரியைகளை செய்ய வேண்டும் என்று எண்ணம் அவனுக்குள் உண்டாயிற்று. ஒருவேளை இவைகள் உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படலாம், ஆனால், அன்றும் இன்றும் சில விசுவாச மார்க்கத்தார், மற்றவர்களுடைய பாராட்டுகளை பெறுவதற்கு, நன்றாக ஜெபம் செய்கின்றார்கள். தங்கள் குரலை மாற்றி, வார்த்தைகளை நாளாந்த சம்பாஷனைகளிலே பயன்படுத்தாத வார்த்தைகளை, அடுக்கடுகாக பேசி மற்றவர்களை கவரும்படிக்கு தேவனை நோக்கி ஜெபிக்கின்றார்கள். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் இத்தகைய ஜெபங்களை ஏற்றுக் கொள்வாரோ? பிரியமானவர்களே, நம்முடைய வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானங்களும் தேவனுக்கு பிரியமுள்ளதாக இருக்கும்படிக்கு, நாம் கருத்தோடு தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும்.

**ஏசாயா 29:13**

**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது**

**ஜெபம்**: என் சிந்தையை அறிந்த தேவனே, நான் உமக்கு முன்பாக முகஸ்தூதி செய்கின்றவனாக காணப்படாதபடிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து, தூய ஆவியினால் வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | மே 18

📖 மாலை வாசகம் – சங்கீதம் 66:18

# பெற்றோருக்கு பிரியமான பிள்ளை யார்?

> **மத்தேயு 6:7**
>
> அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்;

பொதுவாக, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தேவைகளை மட்டுமல்ல, அவர்களுடைய விரும்பங்களையும் பூர்த்தி செய்யும்படிக்கு எண்ணமுள்ளவர்களாக இருந்து, தங்களால் முடிந்த யாவற்றையும் செய்து கொடுகின்றார்கள். ஒருவேளை பிள்ளைகளில் ஒருவன் கீழ்ப டிவற்றவனாக இருந்தாலும், பெற்றோர் அவனை ஆகாதவன் என்று தள்ளிவிடுவது அவர்களுக்கு தூரமான செயலாக இருக்கின்றது அல் லவா? காரியம் இப்படியாக இருக் கும் போது, உங்கள் பிள்ளைகளில் ஒருவன், தன் தேவைகளை பெற் றோரகிய நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று உங்களை புகழ் ந்து, உங்கள் பிரயாசங்களை பாரா ட்டி, உங்களுக்கு பெரிதான கட்டு ரையொன்றை எழுதினால் அதைக் குறித்து பெருமிதம் கொள்வீர்கள் அல்லவா? நாட்கள் கடந்து செல்லும் போது, அவன் உங்கள் வார்த் தைகளுக்கு செவிகொடாமல் வாழ்ந்து கொண்டு, தன் தேவைகள் சந்தி க்கப்பட வேண்டும் என்பதற்காக, உங்கள் செவியில் நல்வார்த்தைகள் வந்து எட்டும்படி, உங்கள் உற்றார் உறவினர் மத்தியில், அவன் உங்க ளுக்கு எப்போதும் புகழ்மாலை சூடிக் கொண்டிருந்தால் அவனைக் குறித்து உங்கள் மனம் எப்படியாக இருக்கும்? காலங்கள் கடந்து செல் லும் போது, வாழ்க்கையில் மாற்றம் இல்லாதவனாய், அதே கட்டு ரையை உங்களுக்கு எழுதி, அதே புகழ்மாலையை அவன் உங்களுக்கு சூடிக் கொண்டிருந்தால், அவனைக் குறித்து நீங்கள் பிரியமாக இருப்பீர்களோ? அருமையான சகோதர சகோதரிகளே, நம்முடைய பரம பிதா நம் தேவைகள் இன்னதென்பதை அறிந்திருக்கின்றார். "ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையனவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத் 7:11). சிலர் கருத்தற்ற அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். எனவே, நம்முடைய நன்றிகளும், விண்ணப்பங்கள் சடங்காச்சாரமும், முகஸ்துதியுமாக இருக்காமல், தேவனோடு உறவு கொள்வதை மேன்மையான எண்ணிக் கொள்ள வேண்டும். அவைஇதயபூர்வமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாக இருக் கின்றார்.

**ஜெபம்**: என் தேவைகளை அறிந்த அன்புள்ள பரலோக பிதாவே, நான் உம்மோடு உறவுகொள்வதையே மேன்மைப்படுத்தி, உம்மை அறிகின்ற அறிவிலே வளர நீர் எனக்கு தேவ ஞானத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெபத்திலே தரித்திருக்க வேண்டும்

"அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் அவர்கள், அதிக வசனிப் பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்க ளைப்போல நீங்கள் செய்யாதிருங்கள் உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திரு க்கிறார்." (மத்தேயு 6:7-8) என்று ஆண்டவராகிய இயேசு கூறிய அறி வுரைகளை சிலர் தவ றான முறை யிலே விளங்கிக் கொண்டு, நீண்ட ஜெபங்களிலே தேவன் பிரியமாயி ரரார் எனவே, நான் சுருக்கமாக, மட்டாக ஜெபம்பண்ணினால்போதும் என்று காலையில் எழுந்தவுடன் சீக்கிரமாக இரண்டொரு வார்த் தைகளை பேசிவிட்டு, தங்கள் வழ மையான காரியங்களுக்கு சென்று விடுகின்றார்கள். இப்படிப்பட்டவ ர்கள், ஒருவேளை உண்மையாக கர்த்தரின் வார்த்தையின் கருப்பொ ருளை அறியாமல் இருக்கலாம் அல்லது தங்கள் மாம்சத்தின் சோர் வினால், கர்த்தருடைய வார்த்தையை தங்கள் வழிகளை நியாயப்படுத்த பயன்படுத்துகின்றவர்களாக இருக்கலாம். எவை எப்படியாக இருந்தா லும், கருப்பொருளாவது. அர்த்தமற்றதும், உண்மையற்றதுமான வார்த் தைகளிலே தேவன் பிரியமாக இரார். ஆண்டவராகிய இயேசு இந்த உலகிலே இருந்த நாட்களிலே, "அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலை யின்மேல் ஏறி, இராமுழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீ'ர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர் களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்." (லூக்கா 6:12-13). நாம் சுருக்கமாக ஜெபம் செய்யும் நேரம் உண்டு. அதுபோலவே நாம் ஜெபத் திலே தரித்திருக்க வேண்டி வேளைகளும் உண்டு. தேவனிடத்தில் ஏறெடுக்கின்ற எந்த ஜெபத்திலும், நயவசனிப்போ டுநாம் செல்லாமல், நம் இருதயத்தை தேவனுடைய சமுகத்திலே ஊற்றி விட வேண்டும். அதிகமாக செய்வதினால், தேவனுடைய கவனத்தை நம்மிடம் திருப்பி கொள்ளலாம் என்ற எண்ணத்தை களைந்துவிட்டு, தேவ சித்தம் நிறை வேறம்படி நாம் ஜெபம் செய்யக்கடவோம்.

**எபேசியர் 6:18**

**எந்தச் சமயத்திலும் சகலவி தமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியி னாலே ஜெபம்பண்ணி, அத ன்பொருட்டு மிகுந்த மனஉ றுதியோடும் சகல பரிசுத்தவா ன்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்து க்கொண்டிருங்கள்.**

**ஜெபம்:** எங்கள் மத்தியிலே வாசம் செய்யும் தேவனே, சகலவித விண்ண ப்பங்களோடும் வேண்டுதல்களோடும் கருத்தோடு ஜெபத்திலே தரித்திருக் கும்படி, உற்சாகமுள்ள ஆவியை எனக்கு தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உண்மையுள்ள இருதயத்தோடு ஜெபியுங்கள்

அந்நாட்களிலே, சிலர், மற்றய மனிதர்கள் காணவேண்டும் என்று தான தர்மங்களை பகிரங்கமாக செய்த வந்தது, மற்றய மனிதர்கள் மத்தியிலே தாங்கள் பக்தியுள்ளவர்கள் என்று காண்பிக்கும் பொருட்டு, குறித்த நேரத்தில், அவர்கள் வீதிகளிலும், சந்தை வழிகளிலும் இருக்கும் போது, பாயை விரித்து, அந்த இடத்திலே ஜெபம் செய்து வந்தார்கள். ஆனால் அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலே தேவனோடு உறவற்றவர்களாக காணப்பட் டார்கள். அன்று மட்டுமல்ல, இன்றும் கூட, இன்ரநெற் ஊடகங்கள் வழியாக அநேக ஜெபங்களும், பாடல்களும், துதிகள் ஏறெடுக்கப்படுகின்றது. சிலர், தேவனுக்கு ஏற்புடைய ஆராதனையை செய்வதைப் பார்க்கிலும், அதிகபடியாக இரசிகர்களை தங்கள் வீடியோகளுக்கு விருப்பு தெரிவிப்பதையும், இரசிகர்கள் தங்கள் காட்சிகளை அதிகபடியாக பார்க்க வேண்டும் என்பதையே மேன்மைப் படுத்தி வருகின்றார்கள். எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவ பாடலை பாடும் ஒரு மனிதனின் வீடியோக்கள் ஒரு மில்லியனுக்கு மேலோக, விருப்பு தெரிவிக்கப்பட்டிருந்தால், பெருந்தொகையான பணங்களை செழவழித்து அவர்கள் தங்கள் ஆலங்களுக்கு அழைக்கின்றார்கள். ஆனால், தேவனுக்கு பிரியமான ஒரு ஊழியன், தன் நாளாந்த அலுவல்கள் தேவ சித்த்தின்படி நடத்தி வந்தால், அந்த ஊழியனானவன், கூப்பிடு தொலையில் இருந்தாலும், அவனை பொருட்படுத்துவதில்லை. இப்பபடிப்பட்ட சூழ்நிலைகள் மத்தியிலே, மனிதர்களுடைய இருதயங்களிலுள்ளவைகளை அறிந்து ஆண்டவராகிய இயேசுதாமே, தம்மை பின்பற்றுகின்றவர்களை நோக்கி: "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்." (மத்தேயு 6:6) என்று கூறினார். அதாவது, ஜெபமானது மனிதர்களுடைய விருப்பு வெறுப்புகளை குறித்ததல்ல, மாறாக, ஒரு விசுவாசியானவன், தன் பிதாவாகிய தேவனோடு உறவு கொள்ளும் பாக்கியமுள்ள வேளையாக இருக்கின்றது. சாமுவேலின் தாயாகிய அன்னாள் தேவ சமுகத்திலே தன் இருயத்தை ஊற்றியது போல நாமும், நம் இருதயத்திலுள்ளவைகளை தேவனிடம் தெரியப்படுத்த வேண்டும்.

**மத்தேயு 6:6**

அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

**ஜெபம்**: பரலோக தேவனே, மனிதர்கள் விரும்ப வேண்டும், பெரும்பான்னையோனோர் என்னை பின்பற்றவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், உண்மையுள்ள மனதோடு உம்மை பின்பற்றி வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவியோடும் உண்மையோடும்

“நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.” (மத்தேயு 6:6)என்று ஆண்ட வராகிய இயேசு ஜெபத்தை குறித்து கூறியிருக்கின்றார். அப்படியா னால், நான் வெளி இடங்களிலே ஜெபி க்கக்கூடாதா? சபையாக கூடி ஜெபித் தால் தேவன் அந்த ஜெபத்திற்கு பலன் இல்லையோ? ஆண்டவராகிய இயேசு, எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களு க்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டுபேராகஅனுப்பினார். அவ ர்கள் திரும்பி வந்த நடந்த சம்பவங் களை கூறியபோது: “அந்த வேளை யில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரி க்கிறேன் ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுள த்துக்குப் பிரியமாயிருந்தது” என்று அவர்கள் முன்னிலையிலே ஜெபம் பண்ணினார். (லூக்கா 10:21). அப்போஸ்தலனாகிய பேதுரு, ஏரோதி னால் கைது செய்யப்பட்டு கடும் காவலிலே வைக்கப்பட்ட போது, அற் புதவிதமாக தேவனாலே விடுதலை பண்ணப்படார். அந்த வேளையிலே, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தார். அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிரு ந்தார்கள். (அப் 12). இப்படியாக வெளி இடங்களிலும், சபைகளிலும் பல ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டதையும், அவைகளுக்கு தேவ வழிட த்ததுதலும், பதிலும் கிடைத்ததை நாம் வேதத்திலே காணலாம். மேலும், ஆண்டவராகிய இயேசு, சமாரிய ஸ்திரியோடு பேசும் போது, அவளை நோக்கி: “உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவி யோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.” என் றார். ஆம் பிரியமானவர்களே, நாம் சபையாக கூடி வந்து ஜெபிக்கும் நேரங்கள் உண்டு. ஆனால், நாம் தனிந்திருந்து தேவனோடு உறவாடும் நேரம் இன்றியமையாதது என்பதை அறிந் கொள்ள வேண்டும்.

**யோவான் 4:24**

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத்தொழுது கொள்ள வேண்டும் என்றார்.

**ஜெபம்:** உண்மையுள்ள இருதயத்தை தள்ளாத தேவனே, நான் ஏறெடுக்கும், ஜெபங்கள் உமக்கு பிரியமுள்ளதாக இரக்கும்படி, ஆவியோடும் உண்மையோடும் நான் உம்மை சேவிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | மே 22

📖 மாலை வாசகம் – சங்கீதம் 40:1

# உதவியற்ற நேரங்களில்....

தேவனாகிய கர்த்தர்தாமே யோனா என்ற தீர்க்கதரியை நோக்கி: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி. அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி யோட தீர்மானித்தான். இறுதியிலே அவன் மீன் வயிற்றிலே இராப்பகல் மூன்றுநாள் இருந்தான். அந்த மீனின் வயிற்றிலிருந்து, யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: “என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன் அவர் எனக்கு உத்தரவு அருளினார் நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர். சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர் நீரோட்டம் என்னைச் சூழ்ந்து கொண்டது. உம்முடைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என்மேல் புரண்டது. நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன் ஆகிலும் இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன். தண்ணீர்கள் பிராணபரியந்தம் என்னை நெருக்கினது ஆழி என்னைச் சூழ்ந்தது. கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது. பர்வ தங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன் பூமியின் தாழ்ப் பாள்கள் என்றென்றைக்கும் என்னை அடைக்கிறதாயிருந்தது. ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர். என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத் தேன் அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. பொய்யான மாயையைப் பற்றிக்கொள் ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன் நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன் இரட்சிப்பு கர்த்தருடை யது என்றான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது.” (யோனா 2:1-10) நாம் சேவிக்கின்ற தேவன்தாமே, எந்த இடத்திலிருந்தும் கருத்தோடு ஏறெடுக்கும் ஜெபத்தை தேவன் கேட்டு, மனம் இரங்கி அதற்கு பதில் கொடுக்கின்றவராயிருக்கின்றார்.

**யோனா 2:2**

**என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்.**

**ஜெபம்**: நொருங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை புறக்கணியாத தேவனே, உம்முடைய சமூகத்திலே நான் எப்போதும் மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும் காணப்படும் இருதயத்தை எனக்குத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அக்கரமசிந்தை வேண்டாம்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், தன் வாலிப நாட்களிலிருந்து பெற்றோரின் சொல்லை கனப்படுத்தாது வாழ்ந்து வந்தான். அதாவது, ஒரு போதும் அவன் தன் பெற்றோருக்கு எதிர்த்து பேசுவதில்லை. அவர்கள் சொல்வதை கேட்டுவிட்டு, அவர்களிடம் இருந்து தனக்கு தேவையானதை பெற்றுக் கொண்டு, வெளியே சென்று, தன் விருப்பங்களை செய்து வந்தான். காலங்கள் சென்று, அவன் திருமணமாகிய பின்பும், தவறாமல் வாரந்தோறும் தன் பெற்றோரை சந்திக்க செல்வது அவனுக்கு வழக்கமாக இருந்தது. பெற்றோர் இருக்கும் வீட்டிலே, சில திருத்த வேளைகளை செய்துவிட்டு, அவர்கள் சுக நலன்களை விசாரித்துபின்பு, அவ்வவ்போது, அவர்களிடம் உதவியை பெற்றுக் கொண்டு சென்றுவிடுவான். அவனுடைய போக்கிலே திருத்தம் இல்லை. தன் செய்கைகளை குறித்து மனம் வருந்துவதில்லை என்ற காரியமானது பெற்றோருக்கு மனவருத்தத்தை கொடுத்து வந்தது. ஆண்டுகள் சென்ற பின்னர், அவனுடைய சிந்தை தவறானது என்பதையும், அவனுடைய மனதிலே உண்மை இல்லை என்பதையும் நன்கு அறிந்து கொண்ட பெற்றோர். அவன் கேட்கும் காரியங்களுக்கு செவி கொடாது போனார்கள். ஒருநாள், அவன் வாழ்க்கையிலே, அவன் செய்கையினால் ஏற்பட்ட விபரீதத்தினால், அவன் எப்பக்கமும் நெருக்கப்பட்டான். தன் பரிதாப நிலையை உணர்ந்து மனவருத்தப்பட்டான். பெற்றோரிடம் சென்று தன் அக்கிரம செய்கைகளுக்காக மன்னிப்பு கேட்டான். அவனுடைய தாழ்விலே அவன் கூக்குரலைகேட்ட பெற்றோர், விரைந்து சென்று அவனுக்கு ஆதரவாக இருந்தது, அவனுக்கு உதவி செய்தார்கள். “தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள் அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன். அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார். என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. (சங் 66:20). ஆம் பிரியமானவர்களே, உங்கள் சிந்தையிலே அக்கிரம செய்கைகள் இருக்குமாயின், முதலாவதாக பிதாவின் சித்தை செய்யும்படிக்கு உண்மையாக ஒப்புக் கொடுங்கள். தேவ ஆவியானவர்தாமே உதவி செய்வார்.

**சங்கீதம் 66:18**

**என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.**

**ஜெபம்:** அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்த தேவனே, நான் மறுபடியும் அக்கிர சிந்தையுள்ளவனாக மாறிவிடாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தனித்திருந்து பிதாவை நோக்கி பாருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த பெற்றோரனவர்கள், தங்கள் மகளானவளோடு கூட, தங்கள் உறவினரின் விசேஷ தினமொன்றின் விருந்திற்காக அவர்கள் வீட்டிற்கு சென்றிருந்தார். சற்று நேரம் சென்ற பின்னர், மகளானவள், தனக்கு தலையிடியாக இருக்கின்றது வீடு செல்ல வேண்டும் என்றாள். அதற்கு தயானவள், தலையிடிதானே, சற்று பொருத்திரு, நாங்கள் உணவு உண்டபின் வீடு திரும்பலாம் என கூறினாள். அங்கிருந்து சிலர் அவர்களின் சம்பாஷனைணை கேட்டுக்கொண்டிருந்ததால், மகளானவள், தயக்கத்தோடு, ஆம் என்று கூறிவிட்டு, பெற்றோருக்காக காத்திருந்தாள். அன்றிரவு, அவர்கள் வீடு திரும்பியதும், மகளானவள், தாங்க முடியாத தலைவலியினாலே, தன் பெற்றோர் முன்னிலையில் அழ ஆரம்பித்தாள். அவனுடைய வேதனையை கண்ட தகப்பனானவர், மகளே, நீ ஏன், இவ்வளவு கடுமையாக இருக்கின்றது என எங்களுக்கு முன்பு கூறவில்லை என்று கேட்டாள். அதற்கு மகளானவள்: என சக வயதையுடவர்கள் அங்கிருந்ததால், அவர்கள் முன்னிலையில் திறந்த மனதோடு பேச முடியாமல் இருந்தது எனக் கூறினாள். பிரியமான சகோதர சகோதரிகளே, நாமும் சிலவேளைகளிலே, சிறு குழுக்களாக அல்லது சபையாக சேர்ந்து நம்மு டைய பரலோக பிதாவிடம் ஜெபிப்பதுண்டு. அவ்விடங்களிலே, திறந்த மனதோடு, சுதந்திரமாக, உங்கள் மனதின் கிலேசங்களை தேவனிடம் தெரிவிக்கக்கூடுமோ? பிள்ளைகள் உடல சுகவீனம் அடையும்போது, மருந்துகள் எடுத்திருந்தாலும், தங்கள் வருத்தங்களை தங்கள் பெற்றோரிடம் கூறி, அவர்கள் அருகே ஒட்டிக் கொண்டு இருந்து விடுகின்றார்கள். பெற்றோர் அவர்களை தேற்றும்போது, வருத்தங்கள் முற்றாக மாறும் வரைக்கும்அவர்கள் ஆறுதல் அடைகின்றார்கள். அதுபோலவே, நாமும், தனித்திருந்து, அந்தரகத்திலிருக்கின்ற நம்முடைய பிதாவை நோக்கி பார்க்கும் போது, அவர் சமுயத்திலே எங்கள் இருதயத்தின் நோவுகளை அவரிடம் கூறி, அவர் சமுகத்திலே ஆறுதல்அடைந்து கொள்ளலாம். நாம் பெற்றோரோடு நல்உறவு பாராட்டுவதைப் போல, நாமும் தனித்திருந்து பிதாவின் உறவிலே வளர்ந்து பெருக வேண்டும். கிறிஸ்து இயேசு வழியான அவரிடம் சேரும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கின்றபடியால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**1 பேதுரு 5:7**

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

**ஜெபம்:** உம் வார்த்தையால் என்னை ஆற்றி, தேற்றி நடத்தும் தேவனே, உம்மிடம் சேரும்படிக்கு, நீர் எனக்கு கொடுத்திருக்க இந்த பெரிதான பாக்கியத்திற்காக நன்றி. அதன் மேன்மை உணரும் இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கு மறைவானவைகள் உண்டோ?

ஒரு தேசத்திலே அரண்டாண்டு வந்த ராஜாவானவன், நீதியுடனும் நியாயத்துடனும் நல் ஆட்சி செய்து வந்தான். ஒரு நாள், அவன் குறிப்பிட்ட ஊருக்கு சென்றபோது, அங்கே ஒரு விதவையானவளை சந்தித்த போது, அந்த ஊரிலே அவளுக்கும், அவளை ஒத்த மற்ற வர்களுக்கும் செய்யப்படும் நியாயமற்ற செயல்களைக் குறித்து ஆச்சரிப்பட்டான். தன்னுடைய ராஜ் யத்திலே இப்படிப்பட செயல்களும் நடக்கின்றா என்றும், தேவைகளை சந்திக்க முடியாமல் இப்படியாக சிலர் தவிக்கின்றார்களா என்றும் அதிர்சியடைந்தான். இது இந்த உல கத்திலே மனிதர்களின் நல்லாட்சி யின் கீழ் நடைபெறும் சம்பவங் ளாக இருக்கின்றது. ஆனால், பர லோகத்திலிருக்கின்ற நம்முடைய பரம பிதா சர்வ வல்லமையுள்ளவர். அவருக்கு மறைவான இரகசியங்கள் காரியங்கள் ஒன்றுமில்லை. ஒருவனும் அவரிடத்திலே சென்று நாட்டில் நடக்கும் புதினங்களை சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவருடைய ஆவிக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. அவருடைய திச்சமுகத்திலே நம்முடைய இருதயத்தை ஊற்றிவற்தற்கு எந்தத் தடையுமில்லை. எந்த செயலா ளரோ, மந்திரியோ நம்மை தடைசெய்ய முடியாது. அவரிடம் நம் வேண் டுதல்களை தெரியப்படுத்தும்படிக்கு, அவர் அலுவலில்லாமல் இருக்கும் நேரத்திற்காக காத்திருக்கத் தேவையில்லை. அவருடைய திருக்கு மாரனாகிய இயேசுவின் நாமத்திலே நாம் அவரிடம் சேரும் பாக்கி யத்தை பெற்றிருக்கின்றோம். ஆதலால் தான், “ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.” எனவே நீங்கள் ஜெபம்பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயு ங்கள் அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படு மென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிரு ங்கள் உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்தி ருக்கிறார்.” எனவே தேவைகளை குறித்து கலங்காமல், தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியை தேடுங்கள்.

**மத்தேயு 6:32**

**இவைகளையெல்லாம் அஞ் ஞானிகள் நாடித்தேடுகிறா ர்கள்; இவைகளெல்லாம் உங் களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.**

**ஜெபம்:** என் நிலைமையை நன்றாய் அறிந்த தேவனே, என் கடந்த காலமும், நிகழ் காலமும், எதிர்காலமும் உமக்கு மறைவாக இல்லை. எனவே, உம்முடைய சமுக்திலே கருத்தோடு சேரும்படிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெபத்தின் மேன்மை

"ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணுவதற்கு, ஒரு வழியல்ல பல வழிகள் உண்டு." என்று இந்த உலகத்தின் ஞானிகள் கூறிக் கொள்கின்றார்கள். காய்சலும் தலையிடியும் வரும்போது, இந்த மாத்திரையை மாத்திர மல்ல, அந்த மூலிகை மாத்திரமல்ல, அவைகளை அடக்குவதற்கு இன்னும் பல மருந்துகள் உண்டு என்று கூறிக் கொள்கின்றார்கள். ஆனால், மனிதனால் கண்டுபிடிக்கப்ப ட்டதும், பின்விளைவுகள் ஏதும் இல் லாத எந்த ஒரு பொருளையோ, மரு ந்தையோ யாரால் கூற முடியும். இந்த உலக போக்கின் படி ஒரு பிரச்ச னைக்கு பல வழிகள் உண்டு ஆனால் சம்பூரணமான வழி ஒன்றே. அந்த வழி தேவனாகிய கர்த்தரிடத்திலே உண்டு. நம்முடைய வாழ்க்கையிலே தேவை கள் உண்டாகும் போது, நாம் அவைகளை பிதாவாகிய தேவனித்தில் ஜெப த்திலே தெரியப்படுத் துகின்றோம். தேவனாகிய கர்த்தர்தாமே மனித ர்களுடைய யோசனைக ளை ஆராய்ந்து அறிகின்றார். "என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்." (சங்கீதம் *139:4*) என்று தாவீது ராஜா தேவனுடைய சர்வ வல்ல மையைக் குறித்து பாடியிருக்கின்றார். உங்கள் பிதாவை நோக்கி நீங் கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். அப்படியானால், நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? நமக்கு தேவைகள் உண்டாகும் போது, தேவை கள் மாத்திரமல்ல, தேவைகளோடு சேர்ந்து, யோசனைகளும், யோச னைகளோடு சேர்ந்து கவலைகளும், கவலைகளோடு சேர்ந்து மன அழுத்தங்களும், மன அழுத்தங்களோடு சேர்ந்து நோய்களும் உண்டாகி விடுகின்றது. அந்த பெலவீனமான வேளைகளிலே, கர்சிக்கின்ற சிங்க த்தைப் போல சாத்தானாவன் யாரை விழுங்கலாம் என்று சுற்றித்திரு க்கின்றான். பொதுவாக, தேவனுடைய பிள்ளைகள், தேவைகளை கர்த்தரிடத்தில் தெரியப்படுத்திய பின், காத்திருப்பதில்லை, விசுவாச த்தை அறிக்கையிடுவதில்லை. தங்களுக்குண்டான பெலவீனத்தினாலே, தங்கள் தேவைகளை சந்திக்க தவறாக தீர்மானங்கள் எடுத்து விடுகின்றார்கள். அதை தவிர்த்துக் கொள்வதற்கும். தேவனுடைய குறித்த நேரம் வரும்வரை, தேவ பெலனை பெற்று விசுவாசத்திலே உறுதியாய் இருக்கும்படிக்கும் ஜெபத்தின் வழியாக ஆவியானவர் தாமே நம்மை பெலப்படுத்துகின்றார். சத்திய வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டி, நம் மனக்கண்களை பிரகாசிப்பிக்கின்றார்.

**கொலோசெயர் 4:2**

**இடைவிடாமல் ஜெபம்ப ண்ணுங்கள், ஸ்தோத்தி ரத்துடன் ஜெபத்தில் விழி த்திருங்கள்.**

**ஜெபம்:** பெலப்படுத்தும் தேவனே, இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதி பதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை களையும் ஜெயிக்க எனக்கு கிருபை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தருடைய வேளை வரும்வரைக்கும்...

தேவனாகிய கர்த்தர்தாமே நம்முடைய தேவைகளை அறிந்திருக்கின்றார். அப்படியானால் நாம் ஏன் ஜெபிக்க வேண்டும். ஏன் தேவ சமுகத்திலே தரித்திருக்க வேண்டும் என்று பல உபத்திரங்களை கடந்து சென்ற தேவ பக்தன் பாடல் வழியாக கூறியதாவது: "எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும் உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது. விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன். எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார். தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார். என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது் தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன் அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும் உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக. என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள் என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று் எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந்தார்கள். என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன்." *(சங்கீதம் 57:1-7).* அலைகளும், புயல்களும், வாழ்க்கை படகில் மோதும் போது, பயமும், திகிலும் உண்டாகின்றது. கார்மேகங்கள் சூழந்து, படவு போகவேண்டிய வழி தெரியாது தத்தளிக்கும் போது, அதில் செல்பவர்கள் செயலிழந்து போய்விடுகின்றார்கள். அந்தத் தருணத்திலே, நாம் தேவனுடைய சமுகத்திலே தரித்திருக்க கற்றுக் கொள்ள வேண்டும். "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்." *(ஏசாயா 40:29-31).* எனவே தீங்குகிற்கு தப்பி ஆத்துமாவை காத்துக் கொள்ளும்படிக்கு ஜெபத்திலே தரித்திருங்கள்.

**சங்கீதம் 27:14**

**கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.**

ஜெபம்: என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக என் தலையை உயர்த்துகின்ற தேவனே, உம்முடைய தகுந்த வேளை வரும்வரை நான் தவறான வழியிலே செல்லாதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிச்சயமாக பதில் உண்டு

“பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வரு‘த்திலே பெல்தெ‘ாத்சார் என்று பெயரிடப்பட்ட தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது் அந்தக் காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது் அந்தக் காரியத்தை அவன் கவனித்து, தரிசனத்தின் பொருளை அறிந்துகொண்டான். அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமுழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தேன். அந்த மூன்றுவாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை. முதலாம் மாதம் இருபத்து நாலாந்தேதியிலே தானியேல் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரையில் இருந்து, அவன் தன் கண்களை ஏறெடுக்கையில், ஜெபத்திற்கு பதில் வந்தது. தேவ தூதன் அவனை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன் ஆதலால், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின் பேரில் நீ கவனமாயிருந்து, கால் ஊன்றி நில் என்றான் இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன். அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே. நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது் உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன். பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான் ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான் ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்என்று கூறி, தானியேல் செய்ய வேண்டியவைகளைா அவன் தானியேலுக்கு வெளிப்படுத்தினான். ஆம் பிரிமான சகோதர சகோதரிகளே, கிரியைகளை நடப்பிப்தற்கு கர்த்தருடைய கரங்கள் குறுகிப் போகவில்லை, நம்டைய வேண்டுதலை கேட்பதற்கு அவருடைய செவி மந்தமாகமில்லை. எனவே, தானியேலைப் போல, செய்தி வரும்வரைக்கும், தவறான தீர்மானங்களை எடுக்காமல், நீடிய பொறுமையோடு, ஜெபத்திலும், வேதத்தின் தியானத்திலும் தரித்திருங்கள். கர்த்தர் குறித்த நேரத்தில் பதிலை அனுப்பி வைப்பார்.

**சங்கீதம் 33:20**

**நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்.**

**ஜெபம்**: உம்முடைய வார்த்தையை அனுப்பி என்னை விடுதலையாக்கின்ற தேவனே, நீர் முன்குறித்தவைகள் நிறைவேறும்படிக்கு நான் உமக்காக காத்திருக்கும் பெலனை எனக்கு தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனோடுள்ள உறவு அவசியமானது

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, எபேசு பட்டணத்திலே, தேவனாகிய கர்த்தர்தாமே தம்முடைய சீஷனாகிய பவுல் ஊடாக விசேஷித்த அற்புதங்களை செய்தருளினார். அப்பொழுது, தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யுதரில் சிலர்பொல்லாத ஆவிகள் பிடித்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யுதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாதஆவிஅவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலை அறி வேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள? அவர்கள் நிர்வாணி களும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள். (அப் 19:13-16). அருமையான சகோதர சகோதரிகளே, பிதாவாகிய தேவன் தாமே, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய அவருக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலாக இயேசுவின் நாமத்தை தந்தருளினார். (பிலி 2:10-11). பேய்கள் நடுநடுங்குகின்ற நாமம் இயேசுவின் நாமம். ஆனாலும், ஒருவன் தான் இரட்சிப்படைய வேண்டும் என்ற எண்ணம் ஏதும் இல்லாமல், தன் கண்போன வழியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் சில மனிதர்கள், தங்கள் பெயர், புகழ், ஆதயத்திற்காக இயேசுவின் நாமத்தை கூறும் போது, அதனால் அவர்களுக்கு பலன் இல்லை. அதனால், ஆண்டவர் இயேசுவின் நாமம் வலுவிழந்து போவதில்லை, மாறாக, அந்த நாமத்தை கூறுபவனுக்கும், அவனுடைய சொந்த வாழ்க்கைக்கும் எந்த தொடர்பும் இல்லை. அக்கிரம சிந்ஜதயோடு ஜெபிக்கின்றவர்களுடைய ஜெபத்திற்கு தேவன் செவிகொடார். தேவனை கண்டடையமாட்டார்கள். ஆண்டவர் இயேசுவே மீட்டு இரட்சிக்கின்றவர் என்று ஒருவன் தன் இருதயத்திலே விசுவாசித்து, அதை தன் வாயினால் உண்மையாக அறிக்கையிடுவானாக இருந்தால், இயேசுவின் நாமம் அவன் வாழ்க்கையிலே பலனுள்ளதாக இருக்கும். இதுபோலவே, இயேசுவின் நாமத்தில், தேவனிடத்தில் ஜெபி க்கின்ற வர்கள், பலனடைவதற்கு, கருத்தோடு தேவ உறவிலே காண்ப்படுகின்றவர்களாக இருக்க வேண்டும்.

**1 பேதுரு 3:12**

**தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடையமுகம் விரோதமாயிருக்கிறது.**

**ஜெபம்:** உம்மை உண்மையாகத் தேடுகின்ற யாவருக்கும் அருகில் உள்ள தேவனே, நான் உண்மையுள்ள மனதோடு, உம்மை சேவிக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை எனக்குத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உண்மையாய் கூப்பிடுகின்றவர்கள்...

கடந்த சில நாட்களாக ஜெபத்தைக் குறித்து நாம் தியானித்து வருகின்றோம். எப்படியாக ஜெபிக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே தம்மை பின்பற்றுகின்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தார். இந்த ஜெபத்தை கர்த்தர் கற்பித்த ஜெபம் என்று நாம் அழைக்கின்றோம். பரலாக இந்த ஜெபத்தை அநேகர் ஒவ்வொரு நாளும் கூறிக் கொள்வார்கள். இன்னும் சில ரோ, காலை, மாலை, வேளையும் என்று, இந்த ஜெபத்தை தங்கள் சங்கிலி ஜெபத்தின் ஒரு பகுதியான ஒரு நாளிலே பலதடவைகள் கூறிக் கொள்கின்றார்கள். இந்த ஜெபம் மாத்திரமல்ல, கர்த்தர் கூறிய எந்தக் காரியத்தையும் கருத்தில்லாமல் ஒரு மந்திரம் போலவோ அல்லது அர்த்தமில்லாமல் ஒயாமல், மீண்டும் மீண்டும் கூறுறிக் கொண்டிருத்தல் தேவனுக்கு பிரியமான காரியமாக இருக்கின்றது. அதாவது, இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகின்றார்கள்: அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கின்றான் என்று கர்த்தர்தாமே, மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கின்றார்கள் என்பதை சுட்டிக் காட்டினார். அருமையான சகோதர சகோதரிகளே, கர்த்தர் கற்பித்துக் கொடுத்த மாதிரி ஜெபத்திலே, ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய தேவைகளைக் குறித்தும், இந்த உலகத்தில் வாழ்வதற்கு தேவையானவைகளைக் குறித்தும் அழகாக குறிப்பிட ப்பட்டுள்ளது. அந்த ஜெபத்தை நாம் கருத்தோடு ஏறெடுக்கும் போது நம்முடைய வாழ்க்கையில் அந்த ஜெபம் பலனுள்ளதாக இருக்கும். கர்த்தர் கற்பித்த ஜெபம் என்று கூறும் போது, அது வேதத்திலே குறிப்பிட்பட்ட மற்ற ஜெபங்களைவிட மேன்மையானதென்றோ அல்லது கர்த்தர் கூறிய மற்றய காரியங்களைவிட தரம் குறைந்ததோ என்று பொருளல்ல. நாம் ஏறெடுக்கும் ஜெபமானது, ஒருவேளை உலகில் வாழும் கோடிக்கணக்கான மனிதர்களுக்கும், நமக்கும் மிகவும் ஏற்புடையதாக இருக்கலாம் ஆனால், அந்த ஜெபமானது தேவனுக்கு பிரியமில்லாத தாக இருந்தால், அதனால் உண்டாகும் பலன் என்ன? எனவே, இருதய ங்களை ஆராய்ந்து மனிதர்களுடைய சிந்தையை அறிகின்ற தேவன் முன்னிலையிலே, உண்மையுள்ள இருதயத்தோடு ஜெபம் செய்வோமாக.

**சங்கீதம் 145:8**

**தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.**

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்து மனிதர்களுடைய சிந்தையை இருக்கின்றவைகளை அறிகின்ற தேவனே, ஆவியோடும் உண்மையோடும் ஜெபம் செய்ய எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கருத்தோடு ஜெபம் செய்யுங்கள்

சில நாடுகளிலே, மனிதர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, தவ றாமல் காலை, மாலை, மதிய வந்தனங்களை ஒருவருக்கொருவர் தெரி வித்துக் கொள்வார்கள். சிலர் ஒருவரை ஒருவர் சுகம் விசாரிப்பர்கள். ஆனால், அதை அநேகர் கருத்தோடு செய்யாமல், அர்த்மில்லாமல் முகஸ்திக்காக செய்து, மிக வேகமாக கடந்து சென்று விடுவார்கள். வந்தனைகளை கூறிக்கொள்வது ஒரு நற்பண்பு ஆனால் முகஸ் திகாக செய்வது கருத்தற்றதாக இருக்கும். நாளாடைவிலே அவை கள் ஒரு அர்த்தமற்ற வாழ்த்து க்கள் என்று யாவரும் அறிந்து கொள்வார்கள். ஆனாலும், கலாச் சாரம் அப்படியாக இருப்பதால், ஒரு கிளிப்பிள்ளையைப் போல அதை செய்து கொள்வார்கள். இத்தகைய வாழ்த்துக்கள் ஒரு மரபைப் போல, வாழையடி வாழையாக, சந்ததி சந்ததியாக கடந்து செல்கின் றது. எனினும், அவர்கள் மத்தியிலும் கருத்தோடு வந்தனைகளை கூறி, வாழத்துகின்ற ஒரு சிலர் இருக்கின்றார்கள். இவ்வண்ணமாக ஜெபங்க ளும் ஏறெடுக்கப்பட்டு வருகின்றது. கற்பித்து கொடுக்க சரி யான போத கர்கள் இல்லாததால், சிலர் தாங்கள் செய்வது இன்ன தென்று அறி யாமல், தங்கள் முன்னோர்கள் செய்தார்கள், எனவே நாங் களும் செய்கிள்றோம் என்று, ஒரு சங்கிலித் தொடரிலே, ஜெபத்தை கூறிவிட்டு சென்று விடுகின்றார்கள். அந்த ஜெபத்தின் காரணம் என்ன? கூறிய வைகளின் கருப்பொருள் என்ன? என்று சிந்திப்பதற்கு எண்ணமோ, நேரமோ இல்லை. அவர்கள் வழிநடத்த நியமிக்கப்பட்டவர்களும், இவை களை குறித்து அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதில்லை. இன்னும் சிலர், தங்கள் வாழ்விற்கும், ஜெபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று அறிந் திருக்கின்ற போதும், தங்கள் பொல்லாத வழிகளை மாற்ற மனதில்லா மலும், ஆலோசனைகளைகேட்காமல், தங்கள் கண்போன போக்கிலேயே வாழ்க்கின்றார்கள். எனவே, கர்த்தருடைய சமுகத்திலே வரும்போது, வேதனை உண்டாக்கும் வழிகள் நம்மிடத்தில் இருக்கின்றதா என்று ஆரா ய்ந்து பார்த்து, அவற்றை மேற்கொள் ளும்படிக்கு, தேவ ஆவியான வரின் துணையை உண்மையுள்ள மனதோடு நாடும் போது, அவர் நாம் தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்குவார். பிரியமானவர்களே, மனம்த திரும்ப வேண்டும் என்ற எண்ணத்துடன், உங்கள் இருதயங்ளை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் உண்மை நிலையை கர்த்தரித்திலே தெரியங்படுத்துங்கள்.

**யோவான் 4:24**

**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகி றவர்கள் ஆவியோடும் உண் மையோடும் அவரைத் தொழு துகொள்ளவேண்டும் என்றார்.**

**ஜெபம்:** என் நிலைமையை நன்றாக அறிந்த தேவனே, நான் அதை உணர் ந்தவனாக, மனத்தாழ்மையோடு, உம்முடைய சமுத்திற்கு வந்து, வேத னை உண்டாக்கும் வழிகளைவிட்டுவிட நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.